In the Court of the Judicial Magistrate No.II, Kovilpatti
Deposition of Witness

| | |
|---|---|
| STC | 1533/2017 |
| PW: | 5 |
| காவல் நிலையம்: | கோவில்பட்டி மேற்கு |
| தேதி: | 18.08.2026 நாள்: செவ்வாய் |
| பெயர்: | ஈஸ்வரி |
| த/பெ: | சங்கரநாராயணன் |
| ஊர்: | கோவில்பட்டி |
| வேலை: | சிட்டி யூனியன் பேங்க் |
| வயது: | 27 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 18.08.2026**
(Accused absent. Petition U/s.317 CrPC/355 BNSS filed and allowed).

**முதல்விசாரணை**

1) நான் கோவில்பட்டியில் வசித்து வருகிறேன். நான் சிட்டி யூனியன் பேங்க்–ல் வேலை பார்த்து வருகிறேன். கடந்த 18.08.2017 ம் தேதி காலை 08.30 மணியளவில் நான் கே.ஆர் கல்லூரி பேருந்தில் புதுஅப்பனேரியில் ஏறி கல்லூரிக்கு தேசிய நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த போது, கோவில்பட்டி புதிய பேருந்து நிலையம் அருகே புதிய பேருந்து நிலையம் நோக்கி வந்த மதுரை பேருந்து எங்கள் கல்லூரி பேருந்தின் மீது மோதியதில் எனக்கு கல்லூரி பேருந்தின் கண்ணாடி உடைந்து எனது முகத்தில் பட்டது.

2) எனது தோழி நிவேதாவுக்கு கம்பி இடித்து காயம் ஏற்பட்டது. சுஷ்மாவுக்கு சீட்டு கம்பி தலையில் பட்டு காயம் ஏற்பட்டது. எங்களது கல்லூரி பேருந்தை ஓட்டி வந்த ஓட்டுநருக்கு பலத்த காயம் ஏற்பட்டது. பின்னர் எங்களை கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். ஓட்டுநருக்கு பலத்த காயம் ஏற்பட்டதால் அருகில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். பின்னர் மருத்துமனையில் போலிசார் வந்து விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) திருநெல்வேலி – கோவில்பட்டி புதிய பேருந்து நிலையத்திற்கு செல்ல தேசிய நெடுஞ்சாலையில் இருந்து சர்வீஸ் ரோட்டிற்கு செல்ல வேகத்தடையை தாண்டி தான் செல்ல வேண்டும் என்றால் விபத்திற்கு பிறகு தான் வேகத்தடை போடப்பட்டுள்ளது.

2) பொதுவாக சர்வீஸ் ரோட்டில் செல்ல வேகத்தடை இருக்கும் என்றால் சரிதான். ஏற்கனவே அந்த இடத்தில் வேகத்தடை இருந்தது என்றாலும் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. மெயின்ரோட்டிற்கு எதிரே உள்ள சர்வீஸ் ரோட்டின் வழியாக தான் கல்லூரிக்கு செல்லவேண்டும் என்றால் சரிதான்.

3) கல்லூரி பேருந்தின் ஓட்டுநர் ஒரு வழிப்பாதையில் தான் பேருந்தை ஓட்டிவந்தார் என்றால் சரிதான். என்னை போலிசார் விசாரணை செய்த போது நான் பேருந்தில் எந்த இடத்தில் அமர்ந்திருந்தேன் என்றும் எனது அருகில் இருந்த நபர்கள் யார் யார் என்று அவர்களுக்கு என்ன காயங்கள் ஏற்பட்டது என்றும் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான்.

4) அரசு பேருந்து பிரேக் போட்டு மெதுவாக சென்று அருகில் இருந்த வீட்டின் மீது மோதவில்லை என்றால் எங்கள் பேருந்தின் மீது நேருக்கு நேராக மோதி பெரும் விபத்து ஏற்பட்டிருக்கும் என்றால் சரிதான். மேற்படி விபத்தினால் மேற்படி கல்லூரி பேருந்து ஓட்டுநரை வேலையை விட்டு நிறுத்திவிட்டார்கள் என்றால் சரிதான்.

5) எங்களுக்கு காயம் ஏற்பட்டதற்கு எங்களது கல்லூரி பேருந்து ஓட்டுநரின் கவனக்குறைவே காரணம் என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது )**

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு

தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு
அவரால் சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்
கையெழுத்து செய்தார்.

(ஒம்). M. மணிமேகலா, எம்.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.2,

கோவில்பட்டி.